**தேசிய அடிப்படைக் கற்கைகள் நிறுவகம் - 2019**

---

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய அடிப்படைக் கற்கைகள் நிறுவகத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர தேசிய அடிப்படைக் கற்கைகள் நிறுவகத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அறிக்கை முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ்ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட

நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிறுவகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிறுவகம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்பு)

------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

--

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை

திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வது எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக நிறுவகத்தின் கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எனது தீர்மானங்கள் கணக்காய்வாளரின் அறிக்கை திகதி வரை பெற்றுக்கொண்ட கணக்காய்வு சான்றுகளின் அடிப்படையிலாகும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிறுவகத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிறுவகத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிறுவகம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

--------------------------

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

-----------------------------------------------------------------------------------------------

கொடுக்கல் வாங்கல்கள் முகாமைத்துவத்தின் பொது மற்றும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்துடன் செயற்படுத்துதல் உரிய அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்களிதன்மையை பேணிச் செல்லல், முகாமைத்துவத்தினால் பொது மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் கூடிய சொத்துக்களை அணுகுதல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மை காணப்படும் சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியில் சீராக்கம் மற்றும் வேறுபாடுகள் காணப்பட்டால் அது தொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்தல் போன்றவற்றுக்கான நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வதற்கு போதியளவு “முறையாக திட்டமிடப்பட்ட” உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையொன்றை நிறுவகத்தினால் பராமரித்துச் செல்வது அவசியமாகவுள்ளது.

### 1.5.2 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | குறித்த நியமங்களுடன் தொடர்பான இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 7 இன் 65 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறையல்லாத சொத்துக்களுக்காக பயனுள்ள ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாததனால் ரூபா 132,990,941 கிரயமான நடைமுறையல்லாத சொத்துகள் பூரணமாக தேய்விடப்பட்ட போதும், தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வந்தன. அதன் பிரகாரம் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் மீளமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | நடைமுறையல்லாத சொத்துக்களுக்காக மீள் மதிப்பீட்டு அறிக்கை கிடைத்த பின்னர் மேலும் பயன்படுத்தக்கூடிய சொத்துக்களின் பெறுமதி மீள் மதிப்பீடு செய்யப்படும். | கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட ரூபா 118,388,385 தொகயான மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் தொடர்பாக இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 90 பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் தேவையான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் தொடர்பாக பின்பற்றப்படும் கணக்கீட்டுக் கொள்கை நிதிக்கூற்றுக்களில் எதிர்காலத்தில் வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் | கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| அடிப்படை கற்கைகள் நிறுவகம் வெவ்வேறு துறைகள் தொடர்பாக ஆராய்ச்சிகளை மேற்கொள்வது முன்னுரிமையான செயற்பாடாக இருந்த போதும் அதற்குரிய செலவினங்களை கணக்கீடு செய்வது தொடர்பாக பின்பற்றப்பட்ட கொள்கையை நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களில் வெளிப் படுத்தப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | ஆராய்ச்சிகளை அபிவிருத்தி செயற்பாடுகள் தொடர்பாக பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கையை எதிர்காலத்தில் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | தொடர்புடைய கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.4 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2018 ஆம் ஆண்டின் பொருள் மெய்மையாய்வின் போது இணங்காணப்பட்ட ரூபா 29,853,300 பெறுமதியான பாவனைக்கு எடுக்க முடியாத சொத்துக்கள் மற்றும் ரூபா 5,693,070 பெறுமதியான காணாமல் போன சொத்துக்கள் என்பவற்றை கணக்குகளிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்காமல் நிதி நிலைமைக் கூற்றில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தன. | குறிப்பிடப்பட்ட பெறுமதிகள் மீண்டும் கணிப்பிடப்பட்டு குறித்த சொத்துக்களை கைதவிர்ப்பு செய்வதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. | நிலையான சொத்துக்கள் கட்டுப்பாடு மற்றும் கணக்கீடு செய்வதற்குரிய உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை மேம்படுத்தப்பட வேண்டும் |

### 1.5.5 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகளின்மை

| | விடயம் | தொகை | சமர்ப்பிக்கப்படாத சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | |
| (அ) | காணி | 28,622,151 | உரித்தினை உறுதிப்படுத்து வதற்குரிய தகவல்கள் | நிறுவகத்தின் நிலையான சொத்துக்கள் மீள்மதிப்பீட்டு செயற்பாடுகள் விலை மதிப்பீட்டு திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் அவ்வறிக்கை கிடைத்தவுடன் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்க நடவடிக்கை எடுக்கின்றேன். | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள சொத்துக்களுக்கான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | அலுவலக உபகரணங்கள, நூலக புத்தகங்கள் மற்றும் வாகனங்கள | 728,547,724 | வருடாந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கை | கொவிட் தொற்று காரணமாக பொருள் மெய்மையாய்வ அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்க முடியாதிருந்ததுடன் அந்த அறிக்கையை முடியுமான சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கின்றேன். | வருடாந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கையை உரிய நேரத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) நிதிப்பிரமாணம் 101 மற்றும் நிதிப்பிரமாணம் 104 | 2018 ஆம் ஆண்டின் பொருள் கணிப்பீட்டுச் சபையால் காணாமல் போனதாக இனங்காணப்பட்ட ரூபா 5,693,070 பெறுமதியான 332 இருப்பு உருப்படிகள் தொடர்பில் நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நிதிப் பிரமாணங்களின் நடவடிக்கை எடுக்காமல் இருந்ததுடன் அதில் ரூபா 344,915 பெறுமதியான பொருட்கள் பொருள் கணிப்பீட்டுச் சபையின் பரிந்துரையின் பேரில் புத்தகங்களிலிருந்து அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | 344,915 பெறுமதியான காணாமல் போன பொருட்கள் புத்தகங்களிலிருந்து அகற்றப்பட்டதுடன் எஞ்சிய பொருட்களைக் கண்டு பிடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன் கண்டு பிடிக்க பொருள் இணை பட்டியல் பராமரிப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளன | காணாமல் போன பொருட்கள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) நிதிப்பிரமாணம் 770 | 2018 ஆம் ஆண்டின் பொருள் கணிப்பீட்டுச் சபையால் பயன்பாட்டிற்கு எடுக்க முடியாதென பொருட்களாக பிந்தரைக்கப்பட்ட ரூபா 29,853,300 பெறுமதியான 397 பொருளிருப்பு உருப்படிகள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. | அப் பொருட்களை விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தின் மூலம் மதிப்பீடு செய்யப்பட்டு எதிர்காலத்தில் ஏலவிற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத பொருட்கள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(1) ஆம் பிரிவு | 2018 ஆம் ஆண்டின் இறுதி ஆண்டறிக்கை மற்றும் மீளாய்வாண்டின் வரைவு ஆண்டறிக்கை கணக்காய்வு திகதியான 2020 மே 15 ஆந் திகதி வரை தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | 2018 ஆம் ஆண்டின் அறிக்கை தயாரித்தல் கொவிட்-19 தொற்று காரணமாக தாமதமானதுடன் தற்போது தயரிக்கப்பட்டு வருகின்றது. | உரிய சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | ரூபா 1,028,564,797 பெறுமதியான நிலையான சொத்துக்கள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்பட்டிருக்க வில்லை. | திறைசேரி சுற்றறிக்கையின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் பதிவேடொனறை தயாரிக்க தேவையான ஆரம்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. | உரிய சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

-------------------------

### 2.1 நிதி விளைவுகள்

------------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி விளைவுகள் ரூபா 79,107,598 பற்றாக்குறையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 99,558,195 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 20,450,597 அதிகரிப்பொன்றைக் காண்பித்தது. இவ்வதிகரிப்பிற்கு மீண்டெழும் மானியங்கள் பெறவுனவு அதிகரித்தமை மற்றும் வழங்கல் மற்றும் ஆராய்ச்சி செலவினம் குறைவடைந்தமை பிரதான காரணங்களாக இருந்தன.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 04 ஆண்டுகளின் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2015 ஆம் ஆண்டு முதல் 2019 ஆண்டு வரையிலும் பற்றாக்குறை ஏற்பட்டிருந்தது. எவ்வாறாயினும் நிதி விளைவுக்கு ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாத சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வினை செம்மையாக்குகையில் 2015 ஆம் ஆண்டின் ரூபா 104,397,176 ஆன நிறுவகத்தின் பங்களிப்பு 2019 ஆண்டின் போது ரூபா 170,341,905 ஆக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிறுவகத்திற்காக Intergraded Software முறைமையொன்றை ஸ்தாபிப்பதற்காக தனியார் நிறுவனமொன்றுடன் 2016 மார்ச் 28 ஆந் திகதி ரூபா 2,200,000 தொகைக்கு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு ரூபா 660,000 ஆன முற்பணத் தொகையொன்று வழங்கப்பட்டிருந்தது. அதற்காக கணனி மற்றும் மென்பொருட்கள் கொள்வனவு செய்வதற்காக 2017 திசெம்பர் 27 ஆந் திகதி முதல் 2019 பெப்ரவரி 02 வரையான காலப்பகுதியில் நிறுவகம் ரூபா 6,864,960 தொகை செலவிடப்பட்டிருந்த போதும் 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரை குறித்த முறைமை ஸ்தாபிப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | ரூபா 6,864,960 தொகையான கணனிகள் மென்பொருள் முறைமைக்கு மாத்திர் அல்லாதிருந்ததுடன் குறித்த நிறுவகத்துடன் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் ரூபா 660,000 ஆன முற்பணத் தொகையொன்று கொடுப்பனவு செய்ய நேர்ந்தது. 2020 மார்ச் 03 ஆந் திகதி முதல் இம்முறை நேரடியாக ஓட்டத்தை ஆரம்பித்துள்ளதுடன் தற்போது பரீட்சாத்த மட்டத்தில் உள்ளது. . | முறையான உரிய் உடன்படிக்கையின் பிரகாரம் முறைமையின் எஞ்சிய வேலைகளை விரைவில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மக்கள் தோட்ட அபிவிருத்தி சபையால் 1990 யூன் 08 ஆந் திகதிநிறுவகத்திற்கு கையளிக்கப்பட்ட 14 ஏக்கர், 2 ரூட், 17.5 பேர்ச் பரப்பளவிலான காணி ஹந்தான தோட்டத்திற்குரிய காணியிலிருந்து சட்டரீதியாக உடமையை பெற்றுக் கொள்வதற்கு கணக்காய்வு | காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்கு கையளக்கப்பட்டுள்ள இக்காணி தொடர்பாக தற்போது மேல் நீதிமன்றத்தில் வழக்கொன்று காணப்படுவதால் எமது நிறுவகத்திற்கு அது தொடர்பாக ஈடுபாட்டை | கையளிப்பு செயற்பாடுகளை துரிதமாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

திகதியான 2020 யூன் 30 ஆந் காட்ட முடியாதுள்ளது.
திகதி நடவடிக்கை
எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் XII ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் மீளாய்வாண்டின் ஆகஸ்ட் 19 ஆந் திகித முதல் 2020 மார்ச் 18 ஆந் திகதி வரையான காலப்பகுதிக்காக கொழும்பு பல்கலைக்கழகத்தின் ஒப்பந்த அடிப்படையில் சிரேஷ்ட பேராசிரியர் பதவியொன்றில் செயற்பட பேராசிரியர் ஒருவருக்காக விடுமுறை அங்கீகரிக்கப்பட்டிருந்தது, அதற்காக நிறுவகத்தின் ஆளுனர் சபையால் 2017 ஒக்தோபர் 07 ஆந் திகதி முதல் தாபனவிதிக் கோவையின் விடுமுறைக்கான அத்தியாயத்தினை மிகைத்த விடுமுறை முறைமையொன்று பின்பற்றப்பட்டிருந்தது. | தேசிய அடிப்படைக் கல்வி நிறுவகத்தின் விரிவுரையாளர்,பேராசிரியர்கள் பல்கலைக்கழக முறைமைக்கு சமமான சம்பள பெறுவதால் பல்கலைக்கழகத்தில் விடுமுறை அங்கீகரிக்கும் வகையில் விடுமுறை அனுமதிக்கப்பட்டிருந்தது. | தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

### 3.3 நிதிய குறைப் பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| முன்னைய ஆண்டில் மூலதன செயற்திட்டங்களுக்காக ரூபா 63,862,681 தொகை குறித்த செயற்பாட்டிற்காக பயன்படுத்தப் படாமல் அதில் ரூபா 51,287,288 தொகை 2018 திசெம்பர் 27 ஆந் திகதி அரச வங்கியொன்றில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. | தற்போது அப்பணம் குறித்த செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்பட்டு வருகின்றது. | நிதியத்தை துரதமாக பயன்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.4 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக திருத்திய பெறுகைத்திட்டத்தின் பிரகாரம் திரட்டிய செயன்முன்னேற்றம் 46 சதவீதமாக இருந்தது. | பொது திறைசேரியிடமிருந்து தேவையான நிதிஏற்பாடுகளை விடுவித்தல் ஆண்டின் நடுப்பகுதியில் இடம்பெற்றதால் பெறுகை செயற்பாடு தாமதமானது. | பெறுகை திட்டத்திற்கு இணங்க மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 3.5 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிறுவகத்தின் பதவியணியில் 15 பதவிகளில் 29 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் அதில் கல்விசார் பதவியணியில் வெற்றிடங்கள் 10 ஆக இருந்தன. மேலும் கல்விசார் பதவியணியில் 14 மிகைகளும் காணப்பட்டன. | சனாதிபதி தேர்தல் காலகத்தில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் ஆட்சேர்ப்பு தொடர்பாக அங்கீகாரத்தை வழங்க தாமதமானமை காரணமாக உரிய வெற்றிடங்களை நிரப்புவதற்கு முடியாதிருந்தது. | மிகை மற்றும் வெற்றிடப் பதிகள் தொடர்பாக விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | ஆராய்ச்சி செயற்பாடுகளுக்காக தாபிக்கப்பட்ட தேசிய அடிப்படை கல்வி நிறுவகத்தினுள் ஆராய்ச்சி பதவியணியின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 1/3 அளவில் | இவ்வவெற்றிடமான பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் அனுமதி | வெற்றிடமான பதவிகள் தொடர்பாக தேவையான நடவடிக்கைகளை விரைவில் மேற்கொள்ள |

| | | | |
|---|---|---|---|
| | (33%) வெற்றிடமாக இருந்தமை காரணமாக நிறுவகத்தின் அடிப்படை மற்றும் நோக்கங்களை அடைந்து கொள்வதில் அதிகளவு தடைகள் காணப்பட்டன. | கோரப்பட்டிருந்தும் இதுவரை அனுமதி வழங்கப்படாமையால் குறித்த ஆட்சேர்ப்பினை மேற்கொள்ள முடியாமல் இருந்தது. | வேண்டும். |
| (இ) | 2011 ஏப்ரல் 11 ஆந் திகதிய டீஎம்எஸ்/E2/62/7/277 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களப் பணிப்பாளரின் கடிதத்திற்கு முரணாக 2016 சனவரி 02 ஆந் திகதி ஆளுனர் சபையால் 2013 மார்ச் முதல் செயற்படும் வகையில் 13 தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் பிரதான தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவிக்கு நியமிக்கப்பட்டிருந்தனர். | 13 தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கு பிரதான தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவிக்கு பதவி உயர்வு பல்கலைக்கழ மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கையின் பிரகாரம் வழங்கப்பட்டுள்ளது. | பதவி உயர்வுகள் உரிய சுற்றறிக்கையின் பிரகாரம் வழங்கப்பட வேண்டும். |
| (ஈ) | 2014 மே 29 ஆந் திகதிய டீஎம்எஸ்/1608 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களப் பணிப்பாளரின் கடிதத்தின் பிரகாரம் பிரதி பணிப்பாளர் (ஆராய்ச்சி பதவி 03 ஆண்டு ஒப்பந்த காலப்பகுதிக்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதும் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதும் அப்பதவியை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பிரதி பணிப்பாளர் பதவிக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ள சம்பள முறைமை பொருந்தாமை காரணமாக அது தொடர்பாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | வெற்றிடமான பதவிகள் தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

4. **நல்லாளுகையும் கணக்களிபொறுப்பும்**

**உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| உள்ளகக் கணக்காய்வினால் மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டிலும் சமர்ப்பிக்கப்பட்ட 40 அவதானிப்புக்களில் 32 அவதானிப்புக்களை சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உள்ளகக் கணக்காய்வு அவதானிப்புக்களை சீராக்கம் செய்தல் தாமதமாக இருந்தமையால் அவற்றை விரைவில் சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகின்றேன். | குறித்த அவதானிப்புக்கள் தொடர்பாக துரிதமாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |